வரலாறு

அலகு 1

ஐரோப்பியர்களின் வருகை

கற்றலின் நோக்கங்கள்

- நவீன இந்திய வரலாற்று ஆதாரங்களின் வகைகள் பற்றி அறிதல்
- இந்தியாவில் போர்ச்சுகீசியரின் வர்த்தகத்தை புரிந்துகொள்ளுதல்
- இந்தியாவில் போர்ச்சுகீசியர்கள் மற்றும் டச்சுக்காரர்கள் ஆதிக்கத் தாக்கத்தை புரிந்து கொள்ளுதல்
- டென்மார்க்கின் காலனி குடியேற்றங்களை பற்றி அறிதல்
- ஆங்கில மற்றும் பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனங்களின் வருகை மற்றும் நிலைப்பாடுகளை அறிதல்

மதிப்பீடு

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?

(அ) வாஸ்கோடகாமா (ஆ) பார்த்தலோமியோ டயஸ்

(இ) அல்போன்சோ-டி-அல்புகர்க் (ஈ) அல்மெய்டா

[விடை : (இ) அல்போன்சோ-டி-அல்புகர்க்]

2. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?

(அ) நெதர்லாந்து (டச்சு) (ஆ) போர்ச்சுகல்

(இ) பிரான்ஸ் (ஈ) பிரிட்டன் **[விடை : (ஆ) போர்ச்சுகல்]**

3. 1453ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

(அ) பிரான்ஸ் (ஆ) துருக்கி

(இ) நெதர்லாந்து (டச்சு) (ஈ) பிரிட்டன் **[விடை : (ஆ) துருக்கி]**

4. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் _____ நாட்டைச் சேர்ந்தவர்

(அ) போர்ச்சுக்கல் (ஆ) ஸ்பெயின் (இ) இங்கிலாந்து (ஈ) பிரான்ஸ்

[விடை : (இ) இங்கிலாந்து]

5. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை

(இ) ஆக்ரா கோட்டை (ஈ) டேவிட் கோட்டை

[விடை : (ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை]

TNPSC JOB

6. **பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்**

(அ) ஆங்கிலேயர்கள் (ஆ) பிரெஞ்சுக்காரர்கள்

(இ) டேனியர்கள் (ஈ) போர்ச்சுக்கீசியர்கள்

[விடை : (ஆ) பிரெஞ்சுக்காரர்கள்]

7. **தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி _____ வர்த்தக மையமாக இருந்தது**

(அ) போர்ச்சுக்கீசியர்கள் (ஆ) ஆங்கிலேயர்கள்

(இ) பிரெஞ்சுக்காரர்கள் (ஈ) டேனியர்கள் **[விடை : (ஈ) டேனியர்கள்]**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) _____ ல் அமைந்துள்ளது.

[விடை: புது தில்லியில்]

2. போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் _____ என்பவரால் ஆதரிக்கப்பட்டார்.

[விடை: மன்னர் இரண்டாம் ஜான்]

3. இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556ல் _____ அரசால் கோவாவில் நிறுவப்பட்டது.

[விடை: போர்ச்சுகீசிய]

4. முகலாயப் பேரரசர் _____ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார். **[விடை: ஜஹாங்கீர்]**

5. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் _____ என்பவரால் நிறுவப்பட்டது.

[விடை: கால்பர்ட்]

6. _____ என்ற டென்மார்க் மன்னர், டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார். **[விடை: நான்காம் கிறிஸ்டியன்]**

III. பொருத்துக.

1.	டச்சுக்காரர்கள்	-	1664
2.	ஆங்கிலேயர்கள்	-	1602
3.	டேனியர்கள்	-	1600
4.	பிரெஞ்சுக்காரர்கள்	-	1616

விடை

1.	டச்சுக்காரர்கள்	-	1602
2.	ஆங்கிலேயர்கள்	-	1600
3.	டேனியர்கள்	-	1616
4.	பிரெஞ்சுக்காரர்கள்	-	1664

IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **[விடை: சரி]**

2. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும். **[விடை: சரி]**

3. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார். **[விடை: தவறு]**

4. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது. **[விடை: சரி]**

1. 1. கவர்னர் நினோ-டி-குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.

2. போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

3. டச்சுக்காரர்கள், சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.

4. இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.

(அ) 1 மற்றும் 2 சரி (ஆ) 2 மற்றும் 4 சரி

(இ) 3 மட்டும் சரி (ஈ) 1, 2 மற்றும் 4 சரி

[விடை: (ஈ) 1, 2 மற்றும் 4 சரி]

2) தவறான இணையைக் கண்டறிக :

(அ) பிரான்சிஸ் டே – டென்மார்க்

(ஆ) பெட்ரோ காப்ரல் – போர்ச்சுகல்

(இ) கேப்டன் ஹாக்கின்ஸ் – இங்கிலாந்து

(ஈ) கால்பர்ட் – பிரான்ஸ் **[விடை: (இ) கேப்டன் ஹாக்கின்ஸ் - பிரிட்டன்]**

VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.

1. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக.

விடை: 1. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.

2. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) புதுடெல்லியில் அமைந்துள்ளது. இது இந்திய அரசின் ஆவணங்களைப் பாதுகாக்கும் முதன்மைக் காப்பகமாகும்.

2. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

விடை: 1. நாணயங்கள் நிர்வாக வரலாற்றை அறிய ஒரு நல்ல ஆதாரமாக திகழ்கின்றன.

2. நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி.1862 ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியில் வெளியிடப்பட்டது.

3. இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?

விடை: போர்ச்சுகீசிய இளவரசர் ஹென்றி உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்ததால் அவர் மாலுமி ஹென்றி என்று அழைக்கப்படுகிறார்.

4. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக.

விடை: டச்சு வர்த்தக மையங்கள்:

பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம் பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின் ஆகும்.

5. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.

விடை: ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள்:

சூரத், ஆக்ரா, அகமதாபாத், புரேச், மசூலிப்பட்டினம், சென்னை, கல்கத்தா ஆகியவை ஆகும்.

VII. விரிவான விடையளி :

1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.

விடை: நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்கள்:

1. இந்தியக் கட்டடக் கலையின் கலை அம்சம் மற்றும் தொழில்நுட்பத்தின் சான்றாக புனித பிரான்சிஸ் ஆலயம் கொச்சி, புனித லூயிஸ் கோட்டை – பாண்டிச்சேரி, புனித ஜார்ஜ் கோட்டை – சென்னை, புனித டேவிட் கோட்டை – கடலூர், இந்தியா கேட், டெல்லி பாராளுமன்றம், குடியரசு தலைவர்

2. சமய, கலாச்சார, வரலாற்று மதிப்புமிக்க மற்ற பொருள் மூலங்கள் சேகரிக்கப்பட்டு அவை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

3. டெல்லியிலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகம் இந்தியாவின் மிகப்பெரிய அருங்காட்சியகமாகும். இது 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
4. நாணயங்கள் நிர்வாக வரலாற்றை அறிய ஒரு நல்ல ஆதாரமாக திகழ்கின்றன.
5. நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி. 1862 ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியில் வெளியிடப்பட்டது.
6. இராணி விக்டோரியாவுக்குப் பிறகு அரியணை ஏறிய மன்னர் ஏழாம் எட்வர்டு தனது உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட்டார்.
7. ரிசர்வ் வங்கி 1935ல் நிறுவப்பட்டு இந்திய அரசின் ரூபாய் நோட்டுக்களை வெளியிடும் அதிகாரத்தை பெற்றது.
8. மன்னர் ஆறாம் ஜார்ஜ் உருவம் தாங்கிய இந்தியாவின் முதல் 5 ரூபாய் நோட்டு ஜனவரி, 1938ல் ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டது.

2. போர்ச்சுக்கீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?

விடை: போர்ச்சுக்கீசிய வணிக மையங்கள்:

1. இந்தியாவில் போர்ச்சுகீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சா – டி – அல்புகர்க் ஆவார்.
2. அவர் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து 1510ல் கோவாவை கைப்பற்றினார்.
3. 1515ல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுகீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார்.
4. அல்புகர்க்குவிற்கு பிறகு கவர்னரான நினோ-டி-குன்கா 1530ல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினர்.
5. போர்ச்சுகீசியர் 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் கோவா, டையூ, டாமன், சால்செட், பசீன், சௌல் மற்றும் பம்பாய் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினர்.
6. வங்காளக் கடற்கரையில் ஹூக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினார்.
7. 1556 ல் போர்ச்சுகீசியரால் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது.
8. அச்சு இயந்திரத்தின் உதவியால் ஐரோப்பிய எழுத்தாளர் 1563ல் கோவாவில் இந்திய மருத்துவ தாவரங்கள் என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார்.

3. ஆங்கிலேயர்கள், எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?

விடை: ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள் :

1. இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய வர்த்தகங்கள் நிறுவனத்திற்கு ஒரு அனுமதி பட்டயம் 1600ம் ஆண்டு வழங்கினார்.
2. 1608 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சில சலுகைகளைப் பெற அனுப்பி வைக்கப்பட்டார்.
3. அவர் சூரத் நகரில் ஒரு வணிக மையத்தை அமைக்க அனுமதி கோரினார். ஆனால் ஜஹாங்கீர் அனுமதி வழங்கவில்லை.
4. 1613ல் ஜஹாங்கீர் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார்.
5. 1615ல் ஜஹாங்கீர் அவைக்கு இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் அவர்களால் சர் தாமஸ்ரோ அனுப்பப்பட்டார். அவர் ஆக்ராவில் மூன்றாண்டுகள் தங்கி ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்.

நிறுவினார்.

7. 1611ல் வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டிணத்தில் நிறுவினர்.
8. 1639ல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர் சென்னையை குத்தகைக்கு வாங்கி அங்கு கிழக்கிந்திய கம்பெனியால் புனித ஜார்ஜ் கோட்டை என்ற வணிக மையத்தை நிறுவியது.

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

9. இது ஆங்கிலேயரால் கட்டப்பட்ட முதல் கோட்டையாகும்.
10. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் போர்ச்சுகீசிய இளவரசி காத்ரினை திருமணம் செய்தற்காக திருமண சீராக பம்பாயை பெற்றார்.
11. 1668ல் இரண்டாம் சார்லஸ் இடமிருந்து பம்பாய்யை குத்தகைக்கு (10 பவுண்டுகள்) கொடுத்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி குத்தகைக்கு பெற்றது.
12. 1700ல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டை கிழக்கிந்தியக் கம்பெனியால் கட்டப்பட்டது.

VIII. வரைபட திறன்

இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐரோப்பிய வர்த்தக மையங்களைக் குறித்து காட்டுக.

1. கள்ளிக்கோட்டை 2. கொச்சின் 3. மெட்ராஸ் 4. பாண்டிச்சேரி 5. சூரத்
6. சின்சுரா 7. பழவேற்காடு 8. கல்கத்தா



IX. உயர் சிந்தனை வினா :

விடை: கி.பி. (பொ.ஆ) 1453ல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டி நோபிள் கைப்பற்றபட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமிடையிலான நிலவழி மூடப்பட்டது. துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது. இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

கூடுதல் வினாக்கள்

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. **ஆனந்தரங்கம் _____ பிரெஞ்சு வர்த்தகத்தில் மொழி பெயர்ப்பாளராக** (Dubash) **இருந்தார்.**

(அ) பாண்டிச்சேரி (ஆ) சூரத் (இ) டாமன் (ஈ) சென்னை

[விடை : (அ) பாண்டிச்சேரி]

2. **தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் சென்னை பதிப்பாசனம் _____ யில் அமைந்துள்ளது.**

(அ) டெல்லி (ஆ) சென்னை (இ) மதுரை (ஈ) திருச்சி

[விடை: (ஆ) சென்னை]

3. **டெல்லியிலுள்ள இந்தியாவின் மிகப்பெரும் அருங்காட்சியகம் தொடங்கப்பட்ட ஆண்டு _____.**

(அ) 1949 (ஆ) 1849 (இ) 1947 (ஈ) 1955

[விடை: (அ) 1949]

4. **1690ல் _____ ஆங்கிலேயரால் கடலூரில் கட்டப்பட்டது.**

(அ) புனித ஜார்ஜ் கோட்டை (ஆ) தரங்கம்பாடி கோட்டை

(இ) புனித டேவிட் கோட்டை (ஈ) வில்லியம் கோட்டை

[விடை: (இ) புனித டேவிட் கோட்டை]

5. **வாஸ்கோடகாமா இரண்டாவது முறையாக இந்தியா வந்தபொழுது _____ இல் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.**

(அ) கொச்சின் (ஆ) கள்ளிக்கோட்டை (இ) கண்ணணூர் (ஈ) கோவா

[விடை: (இ) கண்ணணூர்]

6. **நினோ-டி-குன்கா 1530ல் தலைநகர் கொச்சியிலிருந்து _____ விற்கு மாற்றினார்.**

(அ) கோவா (ஆ) கொல்கத்தா (இ) மும்பை (ஈ) டெல்லி

[விடை: (அ) கோவா]

7. **_____ டச்சுக்காரர்களின் தலைநகராக இருந்தது.**

(அ) கோவா (ஆ) டையூ (இ) டாமன் (ஈ) பழவேற்காடு

[விடை: (ஈ) பழவேற்காடு]

8. **இந்தியாவின் முதல் பிரெஞ்சு வணிகமையம் _____.**

(அ) மும்பை (ஆ) சூரத் (இ) மசூலிப்பட்டினம் (ஈ) மாஹி

[விடை: (ஆ) சூரத்]

9. **பாண்டிச்சேரி _____ ன் மிக முக்கியமான மற்றும் வளமான குடியேற்றமாக விளங்கியது.**

(அ) ஆங்கிலேயர்கள் (ஆ) பிரான்ஸ்

(இ) டச்சு (ஈ) டேனியர்கள் **[விடை: (ஆ) பிரான்ஸ்]**

II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. போர்ச்சுகீசிய இளவரசர் ஹென்றி _____ என அழைக்கப்பட்டார்.

[விடை: மாலுமி ஹென்றி]

3. பிரான்சிஸ் இரண்டாவது வர்த்தக மையம் _____. **[விடை: மசூலிப்பட்டினம்]**

4. அல்போன்சா-டி-அல்புகர்க் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து 1510ல் _____ கைப்பற்றினார்.

[விடை: கோவாவைக்]

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

5. ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட் என்பவர் இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் _____ என அழைக்கப்படுகிறார். **[விடை: தந்தை]**

6. சான்றுகளின் வகைகள் _____ வகைப்படும். **[விடை: இரண்டு]**

7. சென்னை நாட்குறிப்பு பதிவுகள் _____ ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. **[விடை: 1917]**

8. ரிசர்வ் வங்கி முறையாக _____ ல் நிறுவப்பட்டது. **[விடை: 1935]**

9. கி.பி. 1487 ஆம் ஆண்டு போர்ச்சுகீசிய மாலுமியான பார்த்தலோமியா டயஸ் _____ முனையை அடைந்தார். **[விடை: தெற்கு]**

10. 1759ல் நடைபெற்ற _____ போரில் ஆங்கிலேயர்கள், டச்சுகாரர்களைத் தோற்கடித்தனர். **[விடை: பெடரா]**

III. பொருத்துக.

1.	புனித பிரான்சிஸ் ஆலயம்	i.	கடலூர்
2.	புனித லூயிஸ் கோட்டை	ii.	சென்னை
3.	புனித ஜார்ஜ் கோட்டை	iii.	பாண்டிச்சேரி
4.	புனித டேவிட் கோட்டை	iv.	கொச்சி

[விடை: 1-iv, 2-iii, 3-ii, 4-i]

IV. சரியா, தவறா?

1. பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன. **[விடை: சரி]**

2. இந்தியா கேட், டெல்லி பாராளுமன்றம், குடியரசு தலைவர் மாளிகை போன்றவை எழுதப்பட்ட ஆதாரங்களுக்கு சான்றாகும். **[விடை: தவறு]**

3. லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் ஆவணக் காப்பகங்கள் உள்ளன. **[விடை: சரி]**

4. அல்போன்சோ-டி-அல்புகர்க் இந்திய பெண்களுடனான போர்ச்சுகீசிய திருமணங்களை எதிர்த்தார். **[விடை: தவறு]**

V. (1) பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க.

1.

1. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி 1664ல் கால்பர்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது.
2. முகலாயப் பேரரசர் ஜஹாங்கீர் சூரத்தில் வர்த்தக மையம் அமைக்க ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு 1613-ல் அனுமதி வழங்கினார்.
3. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் டச்சு இளவரசி கேத்தினை திருமணம் செய்து கொண்டார்.
4. 1796ல் சுதாநுதியில் வலுவான ஒரு கோட்டை கட்டப்பட்டது. இது 1800ல் வில்லியம் கோட்டை என்று அழைக்கப்பட்டது.

(அ) 2 மற்றும் 4 சரி (ஆ) 1 மற்றும் 2 சரி

(இ) 3 மற்றும் 4 சரி (ஈ) 3 மற்றும் 4 தவறு

[விடை: (ஆ) 1 மற்றும் 2 சரி]

2. தவறான இணையைக் கண்டறியும் :

(அ) பம்பாய் தீவு - குத்தகை

(ஆ) பரங்கிப் பேட்டை - டச்சு கோட்டை

(இ) வில்லியம் ஹாக்கின்ஸ் - கவர்னர்

[விடை: (இ) வில்லியம் ஹாக்கின்ஸ் - கவர்னர்]

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

VI. குறுகிய விடையளிக்கவும்.

1. சான்றுகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

விடை: சான்றுகள் இரண்டு வகைப்படும். அவை நாம் வரலாற்றை எழுதுவதற்கு எழுதப்பட்ட மற்று பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் ஆகும்.

2. எழுதப்பட்ட ஆதாரங்கள் யாவை?

விடை: எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள் சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

3. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் - குறிப்பு வரைக.

விடை: தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் சென்னை பதிப்பாசனம் சென்னையில் அமைந்துள்ளது. இது தென்னிந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும். அங்குள்ள பெரும்பாலான ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. மேலும் அங்கு, டச்சு, டேனிஷ், பாரசீக, மராத்திய நிர்வாக பதிவுகளின் தொகுப்புகள் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய, தமிழ், உருது போன்ற மொழிகளில் உள்ளன.

4. வாஸ்கோடகாமா- குறிப்பு வரைக.

விடை:

1. வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தைத் தொடர்ந்தார். பின்னர் இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கி.பி (பொ.ஆ) 1498 கள்ளிக்கோட்டையை அடைந்தார். மன்னர் சாமரின் அவரை வரவேற்றார்.
2. வாஸ்கோடகாமா 1501 இருபது கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார். அப்பொழுது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார். 1524-ல் வாஸ்கோடகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்தபொழுது நோய்வாய்ப்பட்டு டிசம்பர் 1524-ல் கொச்சியில் காலமானார்.

5. நீலநீர்க்கொள்கை என்றால் என்ன?

விடை: இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதே அல்மெய்டாவின் நோக்கமாக இருந்தது அதற்காக அவர் பின்பற்றிய கொள்கை நீலநீர்க் கொள்கை.

6. தமிழ்நாட்டில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் பற்றி எழுதுக.

விடை: 1502 முதல் பழவேற்காட்டின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திய போர்ச்சுக்கீசியர்கள் டச்சுக்காரர்களிடம் தங்களின் ஆதிக்கத்தை இழந்தனர். பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் 1613-ல் கெல்டிரியா கோட்டையைக் கட்டினர். அக்காலத்தில் பழவேற்காட்டிலிருந்து வைரங்கள் மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நாகப்பட்டினம், புன்னக்காயல், பரங்கிப் பேட்டை (Porto Novo) கடலூர் மற்றும் தேவனாம்பட்டினம் ஆகிய டச்சுகாரர்களின் கோட்டைகள் மற்றும் கைப்பற்றிய பகுதிகளாகும்.

7. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் நிறுவிய வணிக மையங்கள் யாவை?

விடை: பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வர்த்தக மையங்களை நிறுவியது. குறிப்பாக கடலோரப் பகுதிகளான மாஹி, காரைக்கால், பாலசோர் மற்றும் காசிம் பசார் போன்ற இடங்கள் முக்கியமானவையாகும்.

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

VII. விரிவான விடையளி :

1. பிரெஞ்சுக்காரர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களுடைய வணிக மையங்களை நிறுவினர் என்பதை விளக்குக.

விடை:1. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் 1664-ல் உருவாக்கப்பட்டது. 1667-ல் பிரான்காய்ஸ் கரோன் தலைமையில் ஒரு குழு இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டது.

2. வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த ஐரோப்பிய நாடுகளுள் கடைசி ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும்.

3. இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன், சூரத் நகரில் நிறுவினார்.

4. 1669-ல் மார் காரா கோல்கொண்டா சுல்தானின் அனுமதி பெற்று பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினார்.

5. பாண்டிச்சேரி இந்தியாவின் மிக முக்கியமான மற்றும் வளமான பிரெஞ்சு குடியேற்றமானது. பாண்டிச்சேரியில் செயின்ட் லூயிஸ் எனப்படும் கோட்டையை பிரான்காய்ஸ் மாட்டின் என்பவர் கட்டினார்.

6. வங்காளத்தின் முகலாய ஆளுநரான செயிஸ்டகானின் அனுமதி பெற்று 1673-ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி கல்கத்தாவுக்கு அருகே சந்திரநாகூர் என்ற நகரை நிர்மானித்தது.

7. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வர்த்தக மையங்களை நிறுவியது. குறிப்பாக கடலோரப் பகுதிகளான, மாஹி, காரைக்கால், பாலசோர் மற்றும் காசிம் பசார் போன்ற இடங்கள் முக்கியமானவையாகும்.

8. 1742 பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராக ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே என்பவர் நியமனம் செய்யப்பட்டார். அவரது நியமனத்தின் மூலம் பிரெஞ்சு அதிகாரம் மேலும் பலப்படுத்தப்பட்டது. அவருக்குப் பின் பாண்டிச்சேரியின் பிரெஞ்சு ஆளுநராக டூமாஸ் அனுப்பப்பட்டார்.

2. நம் வரலாற்றை எழுதுவதற்கு எழுதப்பட்ட ஆதாரங்கள் நமக்கு பெரிதும் உதவுகின்றன - விளக்குக.

விடை:நாம் வரலாற்றை எழுதுவதற்கு எழுதப்பட்ட மற்றும் பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் நமக்கு பெரிதும் உதவுகின்றன.

எழுதப்பட்ட ஆதாரங்கள்:

1. அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பிற்குப் பின் பல்வேறு மொழிகளில் எண்ணற்ற புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியிட்டன.

2. இதன் விளைவாக கலை இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி அறிய முடிந்தது.

3. இந்தியாவின் ஏராளமான செல்வத்தைப் பற்றி மார்க்கோபோலோ மற்றும் சில வெளிநாட்டுப் பயணிகளின் பயணக்குறிப்புகளிருந்து ஐரோப்பியர்கள் அறிந்து கொண்டனர். இக்குறிப்புகள் ஐரோப்பியர்களை இந்தியாவை நோக்கி ஈர்த்தது.

4. தமிழ் வரலாற்றுக் குறிப்பு ஆவணங்களில் முக்கியமாக இருக்க வேண்டிய ஒரு பெயர் ஆனந்தரங்கம்.

5. இவர் பாண்டிச்சேரி பிரெஞ்சு வர்த்தகத்தில் மொழி பெயர்ப்பாளராக (Dubash) இருந்தார்.

6. 1730 லிருந்து 1760 வரை அவர் எழுதிய பிரெஞ்சு இந்திய உறவுமுறை பற்றிய அன்றாட நிகழ்வுகளின் குறிப்புகள் அக்காலத்தைப் பற்றி அறிய உதவும் ஒரே எழுதப்பட்ட சமய சார்பற்ற மதிப்பு மிக்க பதிவாக நமக்குக் கிடைத்துள்ளன.

7. அவரது குறிப்புகள் அரசியல் தீர்வுகளை வெளிப்படையாக விளக்கும் வரலாற்றாதாரமாக உள்ளன.

சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள், மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

☆ ☆ ☆

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

அலகுத் தேர்வு

நேரம்: 60 நிமிடம் மதிப்பெண்: 25

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். (3 × 1 = 3)

1. 1453ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டி- நோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?

(அ) பிரான்ஸ் (ஆ) துருக்கி

(இ) நெதர்லாந்து (டச்சு) (ஈ) பிரிட்டன்

2. இந்தியாவின் முதல் பிரெஞ்சு வணிகமையம் _____.

(அ) மும்பை (ஆ) சூரத் (இ) மசூலிப்பட்டினம் (ஈ) மாஹி

3. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை

(அ) வில்லியம் கோட்டை (ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

(இ) ஆக்ரா கோட்டை (ஈ) டேவிட் கோட்டை

II. கோடிட்ட இடங்களை நிரப்புக. (3 × 1 = 3)

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) _____ ல் அமைந்துள்ளது.

2. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் _____ என்பவரால் நிறுவப்பட்டது.

3. பிரான்சிஸ் இரண்டாவது வர்த்தக மையம் _____.

III. பொருத்துக. (4 × 1 = 4)

1.	புனித பிரான்சிஸ் ஆலயம்	i.	கடலூர்
2.	புனித லூயிஸ் கோட்டை	ii.	சென்னை
3.	புனித ஜார்ஜ் கோட்டை	iii.	பாண்டிச்சேரி
4.	புனித டேவிட் கோட்டை	iv.	கொச்சி

IV. சரியா? தவறா? (2 × 1 = 2)

1. பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன.

2. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.

V. ஓரிரு வாக்கியங்களில் விடையளி. (4 × 2 = 8)

1. இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?

2. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.

3. தமிழ்நாட்டில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் பற்றி எழுதுக.

4. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் – குறிப்பு வரைக.

VI. விரிவான விடையளிக்கவும்.

1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக. (1 × 5 = 5)

விடைகள்

I. **1.** (ஆ) துருக்கி **2.** (ஆ) சூரத்
3. (ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

II. **1.** புது தில்லியில் **2.** கால்பர்ட்
3. மசூலிப்பட்டினம்

IV. **1.** சரி **2.** சரி

V. **1.** பார்க்க சுராவின் கையேடு VI-3 **2.** பார்க்க சுராவின் கையேடு VI-5
3. பார்க்க சுராவின் கையேடு VI-6 (கூடுதல்) **4.** பார்க்க சுராவின் கையேடு VI-3 (கூடுதல்)

VI. **1.** பார்க்க சுராவின் கையேடு VII-1

TNPSC JOB | www.tnpscjob.com